O.S.No. : 97/2016

Dated : 02.12.2025

**வா.சா.1 : ரவிந்திரன் ; த/பெ. ஜோகி**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

1. தாவா சொத்தின் விஸ்தீரணம் மொத்தம் 41-⅓ சென்ட் என்றால் சரிதான். தாவா சொத்தினை எனது தாத்தா பெல்லா கவுடர் என்பவர் வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி பெல்லா கவுடருக்கு இரண்டு மகன்கள் என்றும் ஒருவர் பெயர் ஜோகி என்றும் மற்றொருவர் பெயர் மாதன் என்றும் சொன்னால் சரிதான். முதலாம் வாதியும் 1-ஆம் பிரதிவாதியும் சகோதரர்கள் என்றாலும் மேற்படி இருவரும் ஜோகியின் மகன்கள் என்றாலும் சரிதான். மொத்த விஸ்தீரன சொத்தான 41 -⅓-ல் எனது தகப்பனார் ஜோகிக்கும் அவரது சித்தப்பா மாதன் என்பவருக்கும் தலா 20 சென்ட் பாத்தியம் என்றால் சரிதான்.

2. எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட 20 சென்ட் பூமியில் 3 சென்ட் பூமியை எனது தகப்பனார் 1-ம் பிரதிவாதிக்கு தானமாக கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி தானம் குறித்து எனக்கு 2003 ஆம் ஆண்டே தெரிய வந்தும் தற்போது வேண்டுமென்றே தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் தானமாக கொடுத்த 3 சென்ட் நிலம் போக மீதியுள்ள 17 சென்ட் நிலத்தை நான் உட்பட எனது சகோதர சகோதரிகள் ஐந்து பேர் சமமாக பிரித்துக் கொண்டோம் என்றால் சரியல்ல.

3. எங்களுக்குள் 2001 செப்டம்பர் மாதத்தில் நடந்த பாகப்பிரிவினையில் ஒவ்வொருவருக்கும் தலா 3 சென்ட் என்ற அடிப்படையில் வாய்மொழி பாகப்பிரிவினை நடைபெற்றது என்றால் சரியல்ல. 2001 ஆம் ஆண்டு நடைபெற்றதாக சொல்லப்படும் பாகப்பிரிவினையின் போது என்ன முடிவு செய்யப்பட்டது என்றால் எனது தந்தை மற்றும் தாயார் சேர்ந்து எனக்கு 6 சென்ட் பூமியை ஒதுக்கி கொடுத்தார்கள். மேற்படி பாகப்பிரிவினையின் போது

யார் யார் இருந்தார்கள் என்றால் எனது தாய், தந்தை மற்றும் சகோதரர்கள் இருந்தார்கள், சகோதரிகள் யாரும் இருக்கவில்லை.

4. நான் கூறுவது போல பாகப்பிரிவினையின் போது எனக்கு 6 சென்ட் நிலம் ஒதுக்கப்பட்டது என்பதை காண்பிக்க ஆவணம் ஏதாவது இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் கூறுவது போல பாகப்பிரிவினையின் போது எனக்கு ஆறு சென்ட் பூமி ஒதுக்கப்பட்டதாக சொல்வது உண்மை அல்ல என்றும் ஒவ்வொருவருக்கும் தலா 3 சென்ட் பூமி தான் ஒதுக்கப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. நான் வழக்குரையில் கூறியுள்ள சர்வே எண்களான 104, 270/6A மற்றும் 6B, 270/6 ஆகிய சர்வே எண்களில் எந்த சர்வே எண் சரியானது என்றால் 270/6 என்ற சர்வே எண் தான் சரியான சர்வே எண் ஆகும்.

5. சர்வே எண் 270/6-ல் தான் எனது பூமி உள்ளது என்பதை காண்பிக்க நில அளவை ஆவணம் அல்லது வருவாய் ஆவணம் ஏதாவது நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது சித்தப்பா மாதன் என்பவர் அவரது 20 சென்ட் பாகத்தை 1975 ஆம் ஆண்டு நஞ்சன் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. மேற்படி நஞ்சன் என்பவரிடமிருந்து 1-ஆம் பிரதிவாதி சுப்பன் என்பவர் மேற்படி 20 சென்ட் பூமியை 1975 ஆம் ஆண்டு கிரையமாக பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

6. ஒன்றாம் பிரதிவாதி சுப்பன் என்பவருக்கு பாகப்பிரிவினை மூலம் வந்த சென்ட் மற்றும் குறைவாக பெற்ற 20 சென்ட் ஆக மொத்தம் 23 சென்ட் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 1 ஆவணத்தின் படி கிரையம் பெற்ற சொத்தின் பழைய சர்வே எண் 104 என்றும் அதன் புதிய சர்வே எண்கள் 270/7, 270/14, மற்றும் 270/29 என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

7. நான் கூறிய சர்வே எண் 270/6 என்பது 1-ஆம் பிரதிவாதி சுப்பன் நஞ்சன் என்பவரிடம் இருந்து கிரையம் பெற்ற 20 சென்ட் பூமிக்கான புதிய சர்வே எண் என்றால் சரியல்ல. நான் வீடு கட்டும் போது 1-ஆம் பிரதிவாதி

மேற்படி வீடானது தனது பூமியில் கட்டப்படுகிறது என்று ஆட்சேபனை செய்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு நான் வீடு கட்டுவதை 1-ஆம் பிரதிவாதி ஆட்சேபனை செய்தபோது நான் வீடு கட்டி விட்டதால் எனக்கு பாகப்பிரிவினை மூலம் கிடைத்த 3 சென்ட் பூமியை 1-ஆம் பிரதிவாதிக்கு கொடுத்து விடுவதாக எனது குடும்ப உறுப்பினர்கள் கூறியதால் 1-ஆம் பிரதிவாதி நான் வீடு கட்டியது குறித்து எந்தவித ஆட்சேபனையும் செய்யவில்லை என்றால் சரியல்ல.

8. மேற்படி 3 சென்ட் பூமியை நான் 1-ஆம் பிரதிவாதிக்கு கொடுத்து விடுவதாக ஒப்புக்கொண்டதால்தான் 1-ஆம் பிரதிவாதி நான் கட்டிய வீட்டினை இடிக்க நீதிமன்றம் மூலம் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண் 270/6-ன் மொத்த விஸ்தீரனம் சுமார் 7 சென்ட் இருக்கும் என்றால் அது சுமார் 6 சென்ட்டிற்குள் தான் இருக்கும். நான் 4 சென்ட் அளவில் வீடு கட்டி உள்ளேன். 2013 ஆம் ஆண்டில் 1-ஆம் பிரதிவாதி வீடு கட்டுவதற்காக பூமியை உட்பிரிவு செய்ய மனு கொடுத்த போது நான் வீடு கட்டியுள்ள பகுதிக்கு 270/6A என்றும் பிரதிவாதி 1-ஆம் பிரதிவாதியின் இடத்திற்கு 276/6B என்றும் உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான் ஆனால் அதை எதிர்த்து நான் மனு கொடுத்துள்ளேன்.

9. அவ்வாறு உட்பிரிவு செய்யப்பட்ட பிறகு 1-ஆம் பிரதிவாதி அதில் உள்ள 3 சென்ட் இடத்தை 2-ஆம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1-ஆம் பிரதிவாதி 2-ஆம் பிரதிவாதிக்கு 3 சென்ட் பூமியை விற்பனை செய்த விவரம் எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் 2016 ஆம் ஆண்டு தான் தெரியவந்தது. நான் மேற்படி உட்பிரிவை ரத்து செய்யக்கோரி கொடுத்த மனுவில் பரம்பரை சொத்தினை உட்பிரிவு செய்து விட்டதால் அதை ரத்து செய்ய கோரி தான் மனு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். 1-ஆம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்துதான் சர்வே எண் 270/6A என்றும் 270/6B என்றும் உட்பிரிவு செய்யப்பட்டது என்றும் அதனால் மேற்படி சொத்தினை விற்பனை செய்ய 1-ஆம் பிரதிவாதிக்கு உரிமை உள்ளது என்றால் சரியல்ல. 2-ஆம் பிரதிவாதி

கிரையம் பெற்ற பூமியில் 2-ஆம் பிரதிவாதி வீடு கட்டி உள்ளார் என்றால் சரிதான்.

10. நான் 6 சென்ட் பூமியில் சுவாதீனத்தில் உள்ளதாக கூறுவது உண்மை அல்ல என்றும் 1-ஆம் பிரதிவாதி கொடுத்த 4 சென்ட் பூமியில் தான் நான் வீடு கட்டி உள்ளேன் என்றும் மேலும் 2 சென்ட் பூமியை ஆக்கிரமிப்பு செய்வதற்காக நான் 6 சென்ட் பூமியில் சுவாதீனத்தில் உள்ளதாக பொய்யாக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

11. நான்தான் 1-ஆம் பிரதிவாதியின் இடத்தில் ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டி உள்ளேன் என்றும் 1-ஆம் பிரதிவாதி அதை சகோதரர் என்பதால் ஆட்சேபனை செய்யவில்லை என்றும் இருப்பினும் மேலும் 2 சென்ட் பூமியை ஆக்கிரமிப்பு செய்ய வேண்டும் என்பதற்காக நான் 6 சென்ட் பூமியில் சுவாதீனத்தில் உள்ளதாக பொய்யாக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கிராம நிர்வாக அதிகாரியிடம் 6 சென்ட் பூமியில் சுவாதீனத்தில் உள்ளதாக பொய்யாக சான்று பெற்று இந்த வழக்கில் தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல. நான் கட்டியுள்ள வீட்டிற்கு அனுமதி பெற்றுள்ளேனா என்றால் இல்லை.

12. நான் வீடு கட்டிய பிறகாவது எனது தகப்பனார் மற்றும் சகோதரர்களிடம் 6 சென்ட் பூமிக்கு எனக்கு பத்திரத்தை செய்து தரும்படி கேட்டேனா என்றால் கேட்கவில்லை. உண்மையாக நான் கூறுவது போல எனக்கு 6 சென்ட் பூமி ஒதுக்கப்பட்டு இருந்தால் நான் அதற்கான பத்திரத்தை எழுதி வாங்கி இருப்பேன் என்றும் உண்மையாக எனக்கு அவ்வாறு ஆறு சென்ட் ஒதுக்கப்படவில்லை என்பதால் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து மேற்படி 6 சென்ட் பூமியை பெற்றுக் கொள்ளலாம் என்று இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1-ஆம் பிரதிவாதி தனக்கு பாத்தியப்பட்ட இடத்தில்தான் வீடு கட்டி உள்ளார் என்றும் எனக்கு கொடுத்த 4 சென்ட் பூமியில் எந்த வித ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல, நான் வீடு கட்டியது போக மீதமுள்ள இடத்தை 1-ஆம் பிரதிவாதி

ஆக்கிரமிப்பு செய்துள்ளார்.

**மறுவிசாரணை**: இல்லை

L. Prakash

Digitally signed by L. Prakash
Date: 2025.12.02 18:54:21 +0530